## 6. எண்கள் 1.1

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(1) 11 மற்றும் 60 ஆகிய எண்களுக்கு இடையே உள்ள பகா எண்களின் எண்ணிக்கை ______ ஆகும்.

(2) 29 மற்றும் ______ஆகிய எண்கள் இரட்டைப் பகா எண்கள் ஆகும்.

(3) 3753 என்ற எண்ணானது 9 ஆல் வகுபடும். ஆகையால் அவ்வெண் _______ ஆல் வகுபடும்.

(4) மிகச்சிறிய 4 இலக்க எண்ணின் மாறுபட்ட பகாக் காரணிகளின் எண்ணிக்கை _________.

(5) 30 என்ற எண்ணின் மாறுபட்ட பகாக் காரணிகளின் கூடுதல் ____

(6) மிகச்சிறிய ஈரிலக்கப் பகா எண்_____

(7) மிகப்பெரிய ஈரிலக்கப் பகா எண்______

**சரியா, தவறா எனக் கூறுக.**

(8) எந்த எண்ணிக்கையிலான ஒற்றை எண்களைக் கூட்டினாலும் ஓர் இரட்டை எண் கிடைக்கும்.

(9) ஒவ்வோர் இயல் எண்ணும் பகா எண்ணாகவோ அல்லது பகு எண்ணாகவோ இருக்கும்.

(10) ஓர் எண்ணானது 6 ஆல் வகுபடும் எனில் அது 3 ஆலும் வகுபடும்.

(11) 16254 என்ற எண்ணானது 2, 3, 6 மற்றும் 9 ஆகிய எண்களால் வகுபடும்.

(12) 105 என்ற எண்ணின் வெவ்வேறு பகாக் காரணிகளின் எண்ணிக்கை 3 ஆகும்.

LIVEWORKSHEETS

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

13. இரு அடுத்தடுத்த ஒற்றை எண்களின் வேறுபாடு

அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 0

14. இரட்டை எண்களில் ஒரே பகா எண்

அ) 4 ஆ) 6 இ) 2 ஈ) 0

15. பின்வரும் எண்களில் எது பகா எண் அல்ல?

அ) 53 ஆ) 92 இ) 97 ஈ) 71

16. 27 என்ற எண்ணின் காரணிகளின் கூடுதல்

அ) 28 ஆ) 37 இ) 40 ஈ) 31

17. ஓர் எண்ணின் காரணிகள் 1, 2, 4, 5, 8, 10, 16, 20, 40 மற்றும் 80 ஆகும் எனில் அந்த எண் என்ன?

அ) 80 ஆ) 100 இ) 128 ஈ) 160

18. 60 என்ற எண்ணை 2 x 2 x 3 x 5 எனப் பகாக் காரணிப்படுத்தலாம். இதைப் போன்ற பகாக் காரணிப்படுத்துதலைப் பெற்ற மற்றொரு எண்

அ) 30 ஆ) 120 இ) 90 ஈ) சாத்தியமில்லை

19. 6354*97ஆனது 9 ஆல் வகுபடும் எனில், * இன் மதிப்பு

அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 7

20. 87846 என்ற எண்ணானது ___________ வகுபடும்.

அ) 2 ஆல் மட்டும் ஆ) 3 ஆல் மட்டும்
இ) 11 ஆல் மட்டும் ஈ) இவை அனைத்தாலும

.

LIVEWORKSHEETS